# மகா கும்பமேளா: ஆளுநர் ஆர்.என்.ரவி புனித நீராடினார்



பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகாகும்பமேளாவில் சனிக்கிழமை புனித நீராடிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி.

**சென்னை, பிப். 22:** உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சனிக்கிழமை புனித நீராடினார்.

இது குறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்ட 'எக்ஸ்' தளப் பதிவு:

பாரதம் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து வந்த கோடிக்கணக்கான ஹிந்துக்களுடன் சேர்ந்து,பிரயாக்ராஜின் புண்ணிய தீர்த்தமான திவ்ய, பவ்ய மகா கும்பத்தில் நான் (ஆளுநர்) புனித நீராடி, தமிழ்நாட்டின் சகோதர, சகோதரிகளின் நல்வாழ்வுக்காகவும், நமது மாபெரும் தேசமான பாரதத்தின் இணக்கமான வளத்துக்காகவும் வேண்டி வழிபட்டேன்.

இங்கு காற்றில் பரவியுள்ள தீவிரமான நேர்மறை சக்தி அனைவரையும் ஆழமாகத் தொட்டு மற்றவர்களுடன் இணைக்கிறது. சுமார் 60 கோடி சநாதனிகள் ஏற்கெனவே புனித நீராடிய இந்த தனித்துவமான மற்றும் பிரம்மாண்டமான சநாதன தர்ம விழா, மறுமலர்ச்சியடைந்த ஒரே பாரதம்- உன்னத பாரதத்தின் உறுதியான சான்றாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆயுள் தண்டனைக் கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கான விதிகள்

## தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் ஆலோசனை

**சென்னை, பிப். 22:** ஆயுள் தண்டனைக் கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்ய தகுதி இழக்கச் செய்யும் விதிகளை மறு ஆய்வு செய்ய இதுவே தக்க தருணம் என தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் அறிவுரை வழங்கியுள்ளது.

கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியாக புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராஜ்குமார் என்பவர், தன்னை முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி தமிழக அரசுக்கு விண்ணப்பித்தார். அவரது விண்ணப்பத்தை பரிசீலித்த அரசு, வரதட்சணை கொடுமை குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்ட ராஜ்குமாரை முன்கூட்டியே விடுதலை செய்ய அரசாணை விதிகளில் இடமில்லை. 2023 செப்டம்பரில் அவர் 14 ஆண்டுகள் சிறைவாசத்தை நிறைவு செய்யவில்லை எனக் கூறி, அவரது விண்ணப்பத்தை நிராகரித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து ராஜ்குமார் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் என்.செந்தில்குமார் அமர்வு, வரதட்சணை கொடுமை குற்றச்சாட்டில் விதிக்கப்பட்ட இரு ஆண்டுகள் தண்டனையை மனுதாரர் ஏற்கெனவே அனுபவித்து விட்டார். குறைந்த தண்டனையை ஏற்கெனவே அனுபவித்து விட்டால், சம்பந்தப்பட்ட ஆயுள் தண்டனை கைதியை முன்கூட்டி விடுதலை செய்யலாம் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனை நீதிபதிகள் சுட்டிக்காட்டி, ராஜ்குமாரை விடுதலை செய்ய உத்தரவிட்டனர்.

அதேவேளையில், குறைந்த தண்டனை விதிக்க வகை செய்யும் சில சட்டப் பிரிவுகளில் தண்டிக்கப்பட்டிருந்தால், முன்கூட்டியே விடுதலை செய்ய தகுதியில்லை என அரசாணையில் கூறப்பட்டுள்ள விதிகள் உச்சநீதிமன்ற உத்தரவுக்கு முரணாக உள்ளது. முன் கூட்டி விடுதலை செய்ய தகுதி இழப்பு செய்யும் இந்த விதிகளை அரசு மறு ஆய்வு செய்ய இதுவே தக்க தருணம் என நீதிபதிகள் தங்கள் உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# நடனக் கலைஞர் திடீர் உயிரிழப்பு


**சிவகங்கை, பிப். 22:** புத்தகத் திருவிழாவில் சனிக்கிழமை நடனமாடிய நடனக் கலைஞர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

சிவகங்கை மன்னர் பள்ளி வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் புத்தகத் திருவிழா கடந்த 21-ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இந்த வளாகத்தில் தனியாக அமைக்கப்பட்ட அரங்கில் தினமும் காலை 10 மணி முதல் மாலை 6.30 மணி வரை பள்ளி, கல்லூரி மாணவிகள், கலைக் குழுக்கள், நடனப் பள்ளிகள் சார்பில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

சனிக்கிழமை மாலை நடைபெற்ற கலை நிகழ்ச்சியின்போது, நடனக் கலைஞரும், நடன ஆசிரியருமான சிவகங்கை அகிலாண்டபுரத்தைச் சேர்ந்த முருகையா மகன் ராஜேஷ்கண்ணன் (53) மேடையில் நடனமாடிக் கொண்டிருந்த போது, திடீரென மயங்கி விழுந்தார்.

விழாக் குழுவினர் அவரை அவசர ஊர்தியில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இதுகுறித்து சிவகங்கை நகர் காவல் நிலைய போலீஸார் விசாரிக்கின்றனர்.

# பங்குச் சந்தையில் முதலீடு செய்வதாக ரூ. 6.46 கோடி மோசடி: தம்பதி கைது



கைது செய்யப்பட்ட தம்பதி விக்னேஷ், ரேகா.

**ஆவடி, பிப். 22:** பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் இரட்டிப்பு பணம் தருவதாகக் கூறி ரூ. 6.46 கோடி மோசடி செய்த தம்பதியை ஆவடி மத்திய பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

சென்னை, கொளத்தூர், ஜி.கே.எம். காலனியைச் சேர்ந்தவர் கலைவாணன் (34). தனியார் நிறுவன ஊழியர். இவரிடம் செங்குன்றம், சோலையம்மன் நகரைச் சேர்ந்த விக்னேஷ் (32) என்பவர், பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் பணத்தை இரட்டிப்பு செய்து தருவதாக ஆசை வார்த்தை கூறினாராம். அப்போது கலைவாணன் தன்னிடம் பணம் இல்லை எனக் கூறியுள்ளார். அதற்கு விக்னேஷ், தன்னுடைய நண்பர் சதீஷ் என்பவர் மூலமாக வங்கியில் கடன் வாங்கிக் கொடுத்து, அந்த கடனை தாங்கள் அடைத்து விடுவதாக கலைவாணனிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து, கலைவாணன், சதீஷின் வாட்ஸ்ஆப் எண்ணுக்கு அவரது ஆவணங்களை அனுப்பியுள்ளார். இதன் பிறகு கலைவாணனுக்கு வங்கியில் இருந்து கடன் தொகை வந்ததுடன், கடந்த 2021-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை ரூ. 1.10 கோடி பணத்தை விக்னேஷ் மற்றும் அவர் கூறிய வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை அனுப்பியுள்ளார். சில மாதங்கள் மட்டும் கலைவாணன் வங்கிக் கணக்கிற்கு லாபத் தொகை வந்ததாம். பின்னர் அவருக்கு எந்தவித பணமும் வரவில்லையாம்.

மேலும், விக்னேஷ் உள்ளிட்டோர் இதுவரை வங்கிக் கடனை செலுத்தாமலும், லாபத் தொகையை மற்றும் பணத்தையும் திருப்பக் கொடுக்காமலும் ஏமாற்றியுள்ளனர்.

இது குறித்து கலைவாணன் ஆவடி காவல் ஆணையரகத்தில் அண்மையில் புகார் அளித்தார். ஆணையர் கி.சங்கர் உத்தரவின்பேரில், ஆவடி மத்திய குற்றப்பிரிவு ஆய்வாளர் கோபிநாத் தலைமையில் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தினர்.

அதில், கலைவாணன் உள்பட 18 பேரிடம், விக்னேஷ் உள்ளிட்டோர் ரூ. 6.46 கோடி பணத்தை மோசடி செய்தது தெரியவந்தது. இதையடுத்து, தலைமறைவாக இருந்த விக்னேஷ் (32), அவரது மனைவி ரேகா (30) ஆகிய இருவரையும் வந்தவாசி அருகே செம்பூரில் அண்மையில் கைது செய்தனர். தொடர்ந்து போலீஸார் இவர்களை பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

மேலும், இந்த வழக்கு தொடர்பாக சதீஷ் உள்ளிட்டோரை தேடி வருகின்றனர்.

# எதிர்ப்புகளால் ஊக்கமடைகிறேன்



**சென்னை, பிப்.22:** காங்கிரஸ் கட்சியில் உள்ள சில மாவட்ட தலைவர்களின் எதிர்ப்புகளால், தான் ஊக்கம் பெறுவதாகவும், இன்னும் தீவிரமாகப் பணியாற்றப் போவதாகவும் அக்கட்சியின் தமிழ்நாடு தலைவர் செல்வப்பெருந்தகை கூறினார்.

சென்னை சத்தியமூர்த்திபவனில் சனிக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்ற பிறகான ஓராண்டு பணி மனநிறைவைத் தருகிறது. காமராஜர் வழியில் பாரம்பரிய காங்கிரஸ் கட்சியை கட்டமைப்பதற்காக கிராம கமிட்டி கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் சில மாவட்டத் தலைவர்களுக்கு அதிருப்தி என்றாலும், பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர். கிராம கமிட்டி சீரமைப்பு 46 சதவீதம் நிறைவடைந்துள்ளது. தலைவராக பொறுப்பேற்ற பிறகு மூன்று முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளேன். நான்காவது முறையும் விரைவில் செல்லவுள்ளேன்.

தில்லியில் எனக்கு எதிராக மாவட்டத் தலைவர்கள் புகார் அளித்திருப்பது பற்றி எதுவும் நினைக்கவில்லை. அவர்களின் புகார் குறித்து தலைமைதான் முடிவு செய்ய வேண்டும். உண்மையைக் கூறினால், அவர்களின் எதிர்ப்புகளால் ஊக்கம் பெறுகிறேன். இன்னும் தீவிரமாகப் பணியாற்றுவேன் என்றார் அவர்.

மாநிலத் தலைவராக பொறுப்பேற்று ஓராண்டுகள் நிறைவடைந்ததையொட்டி செல்வப்பெருந்தகைக்கு மூத்த தலைவர்கள் கே.வீ.தங்கபாலு, கிருஷ்ணசாமி, பீட்டர் அல்போன்ஸ் உள்பட பலர் வாழ்த்து கூறினர்.

## நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகள்

# அரசு வெள்ளை அறிக்கை வெளியிட ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்



**சென்னை, பிப்.22:** திமுக அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு விழாவில் கலந்து கொண்டு பேசிய முதல்வர், தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளாக அளித்த திட்டங்களில் நூற்றுக்கு 90 சதவீதம் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார். இது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் செயல்.

திமுகவால் 505 வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. அதில் பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக, சமையல் எரிவாயு உருளைக்கு ரூ.100 மானியம், மாதம் ஒரு முறை மின் கட்டணம் செலுத்தும் முறை அமல், நியாயவிலைக் கடைகளில் கூடுதலாக ஒரு கிலோ சர்க்கரை, உளுத்தம் பருப்பு விநியோகம், சிறு குறு விவசாயிகளுக்கு புதிய மோட்டார் வாங்க ரூ.10 ஆயிரம் மானியம், நீட் தேர்வு ரத்து உள்பட நூற்றுக்கும் மேலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. 90 சதவீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருந்தால், அது தொடர்பாக வெள்ளை அறிக்கையை அரசு வெளியிட வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

# 7 திருட்டு வழக்குகளில் தொடர்பு: ஞானசேகரனிடம் போலீஸார் விசாரணை

**சென்னை, பிப்.22:** அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரனுக்கு 7 திருட்டு வழக்குகளில் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கோட்டூரைச் சேர்ந்த பிரியாணி கடைக்காரர் ஞானசேகரன் கடந்த 25-ஆம் தேதி கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், பள்ளிக்கரணை, மேடவாக்கம் பகுதிகளில் 2022 முதல் 2024-ஆம் ஆண்டு வரை வீடுகள், பங்களாக்கள் ஆகியவற்றில் நடந்த திருட்டு குறித்து போலீஸார் நடத்திய விசாரணையில், ஞானசேகரனுக்கு தொடர்பு இருந்தது தெரியவந்தது. இவ் வழக்கில் ஞானசேகரன் வைத்திருக்கும் விலை உயர்ந்த கார் மூலம் துப்பு துலக்கப்பட்டதாக போலீஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்குகளின் விசாரணைக்காக பள்ளிக்கரணை போலீஸார், புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஞானசேகரனை கடந்த வெள்ளிக்கிழமை 3 நாள்கள் தங்களது காவலில் எடுத்து விசாரித்தனர். விசாரணையில் பள்ளிக்கரணை, மேடவாக்கம் பகுதியில் நடந்த 7 திருட்டு வழக்குகளில் ஞானசேகரனுக்கு தொடர்பு இருந்ததும், இச் சம்பவங்களில் ஞானசேகரனுக்கு சுமார் 200 பவுன் தங்க நகைகள் கிடைத்ததும், அதன் மூலம் அவர் சொந்த வீடு, சொகுசு கார் என ஆடம்பரமாக வாழ்ந்ததும், 3 இடங்களில் பிரியாணி கடை நடத்தியதும் தெரியவந்தது. இதேபோல சென்னையில் பல்வேறு பகுதிகளிலும் ஞானசேகரன் கைவரிசை காட்டியுள்ளாரா என போலீஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# தங்கம் பவுனுக்கு ரூ.160 உயர்வு



**சென்னை, பிப்.22:** சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சனிக்கிழமை பவுனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.64,360-க்கு விற்பனையானது.

ஆபரணத் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கமாக இருந்து வரும் நிலையில், வெள்ளிக்கிழமை பவுனுக்கு ரூ.360 குறைந்து ரூ.64,200-க்கு விற்பனையானது. தொடர்ந்து சனிக்கிழமை கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ரூ.8,045-க்கும், பவுனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.64,360-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை கிராம் ரூ.1 குறைந்து ரூ.108-க்கும் ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.1,000 குறைந்து ரூ.1,08,000-க்கும் விற்பனையானது.

# தலைமறைவான இரு மாவோயிஸ்ட் பயங்கரவாதிகள் கைது

**சென்னை, பிப்.22:** தமிழகத்தில் தலைமறைவாக இருந்து வந்த இரு மாவோயிஸ்ட் பயங்கரவாதிகளை க்யூ பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

தேனி மாவட்டம் பண்ணைபுரம் பகுதியைச் சேர்ந்தவர் கார்த்திக் (41). இவர், தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் இயக்கத்தில் இணைந்து செயல்பட்டு வந்தார்.

கார்த்திக் தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே முருகமலை வனப்பகுதி, கேரள மாநிலம் வயநாடு வனப்பகுதியில் மாவோயிஸ்ட்டுகளுடன் ஆயுத பயிற்சியில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் பிணையில் வெளிவந்த கார்த்திக் 2011-ஆம் ஆண்டு முதல் தலைமறைவாக இருந்து வந்தார். தலைமறைவாக இருந்தபடி மாவோயிஸ்ட் இயக்கத்தில் தீவிரமாக இயங்கியபடி சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். தமிழகத்தில் மட்டுமன்றி பிற மாநிலங்களிலும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டார்.

மாவோயிஸ்ட் இயக்கத்தை வலுப்படுத்துவதற்காக கேரள மாநில வனப்பகுதிகளில் ஆயுத பயிற்சிகளையும் மேற்கொண்டார். இதனால், அவர் மீது கேரள மாநிலம் கொச்சி தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) அதிகாரிகள் வழக்குப்பதிந்து தேடி வந்தனர். இதன் விளைவாக கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களின் காவல் துறையினரும் தீவிரமாக தேடி வந்தனர்.

இதனால் கார்த்தி, போலீஸாரின் கையிலும் சிக்காமல் இருக்க 'சின்ன கார்த்திக்', 'பன்னாபுரம் கார்த்தி', 'ராஜேஷ்', 'குமார்', 'கௌதம் கார்த்திக்' என்று தனது பெயரை மாற்றி வலம் வந்துள்ளார்.

**சேப்பாக்கத்தில் கைது:** இந்நிலையில், கார்த்திக் சென்னையில் பதுங்கியுள்ளதாக க்யூ பிரிவு போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து க்யூ பிரிவு போலீஸார் சென்னையில் சந்தேகத்துக்குரிய பகுதிகளை ரகசியமாக கண்காணித்து வந்தனர்.

இதற்கிடையே சேப்பாக்கம் எழிலகம் அருகே சந்தேகத்துக்குரிய வகையில் வந்த ஒரு நபரை பிடித்து விசாரித்தனர். விசாரணையில் அவர்தான் தேடப்படும் மாவோயிஸ்ட் பயங்கரவாதி கார்த்தி என்பது தெரியவந்தது. இதையடுத்து போலீஸார் கார்த்தியை ரகசிய இடத்துக்கு அழைத்துச் சென்று, விசாரித்தனர். விசாரணைக்கு பின்னர், அவரை கைது செய்ததாக சனிக்கிழமை தெரிவித்தனர். மேலும், தொடர் விசாரணைக்காக அவரை மதுரைக்கு அழைத்துச் சென்றனர்.

**ஒசூரில் மற்றொரு பயங்கரவாதி கைது:** இதேபோல மற்றொரு மாவாயிஸ்ட் பயங்கரவாதியான சந்தோஷ்குமார் என்பவரை க்யூ பிரிவு போலீஸார், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி அருகே ஆழியாறு பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் கடந்த 2014 ஆம் ஆண்டு வீட்டைவிட்டு வெளியேறி, நக்ஸல் இயக்கத்தில் சேர்ந்து செயலாற்றி வந்தார்.

கேரளத்தின் கபினி தள நக்ஸல் இயக்க தலைவராக சந்தோஷ் செயல்பட்டு வந்த இவர் மீது வயநாடு மாவட்டம், தலப்புழா பகுதியில் கண்ணிவெடிகள் வைத்த சம்பவம் தொடர்பான வழக்கு உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட வழக்குகள் தமிழகம் மற்றும் கேரளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சந்தோஷ் தமிழகத்திற்குள் இடம்பெயர்ந்துள்ளதாக, கேரள நக்ஸல் தடுப்புப் பிரிவு போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து, தமிழக உளவுத் துறை போலீஸாருடன் இணைந்து சந்தோஷின் நடவடிக்கைகளை அவர்கள் தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில், தமிழக எல்லையான ஒசூர் மாநகராட்சி ராம் நகரில் கடந்த 2 மாதங்களாக சந்தேகப்படாத வகையில் சந்தோஷ் வசித்தது தெரியவந்தது. இதையடுத்து, தமிழக போலீஸார் உதவியுடன், கேரள மாநில நக்ஸல் தடுப்புப் பிரிவு போலீஸார் சந்தோஷை வெள்ளிக்கிழமை இரவு கைதுசெய்து கேரளத்துக்கு அழைத்துச் சென்றனர். பிறகு, எர்ணாகுளம் நீதிமன்றத்தில் சனிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட அவர், சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ் வழக்குகளில் சிறப்பாக துப்பு துலக்கிய க்யூ பிரிவு போலீஸாரை தமிழக காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் பாராட்டினார்.

# பிப்.26-இல் தவெக முதலாமாண்டு விழா

**சென்னை, பிப்.22:** தமிழக வெற்றிக் கழகத்தின் முதலாமாண்டு விழா செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் அருகே பூஞ்சேரியில் பிப்.26-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதையொட்டி பொதுக்குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. தனியார் சொகுசு விடுதியில் நடைபெறவுள்ள இந்த விழாவில் 2,000 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மாவட்ட வாரியாக குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

விஜய்-க்கு பாதுகாப்பு வழங்குவது, அவர் வந்து செல்வதற்கான பாதைகள், வாகனங்கள் நிறுத்தும் இடம் உள்ளிட்டவற்றை கட்சியின் பொதுச்செயலர் புஸ்ஸி ஆனந்த் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

கட்சி நிர்வாகிகள் சிரமமின்றி வந்து செல்வதற்கான பாதைகள், சுமார் 2000 பேருக்கு சைவ, அசைவ உணவு வழங்குதல் உள்ளிட்டவை குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

அனுமதிச் சீட்டு இல்லாதவர்கள் விழாவில் பங்கேற்க அனுமதியில்லை என்று தவெக வட்டாரங்கள் தெரிவித்தன.

# ரயில்களில் பெண்கள் பெட்டியில் அத்துமீறி பயணம்: 207 ஆண்கள் கைது

**சேலம், பிப். 22:** சேலம் ரயில்வே உட்கோட்டத்துக்கு உள்பட்ட ரயில் நிலையங்களில் பெண்கள் பெட்டியில் அத்துமீறி ஏறிய 207 ஆண்கள் கைது செய்யப்பட்டனர்.

கோவை - திருப்பதி ரயிலில் கடந்த மாதம் பெண்களுக்கான சிறப்பு பெட்டியில் பயணித்த ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 5 மாத கர்ப்பிணியை இளைஞர் ஒருவர், பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதோடு, ரயிலில் இருந்து கீழே தள்ளினார். இதையடுத்து உயிருக்கு ஆபத்தான நிலையில் அந்த பெண் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இந்த சம்பவம் தொடர்பாக வேலூரைச் சேர்ந்த ஹேமராஜை போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதையடுத்து, அனைத்து ரயில் நிலையங்களிலும் பெண்கள் பெட்டியில் பாதுகாப்பை உறுதி செய்யும் பணியில் ரயில்வே போலீஸார் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, பெண்களுக்கான சிறப்பு பெட்டியில் அத்துமீறி ஏறும் ஆண்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சேலம் ரயில்வே உட்கோட்டத்துக்கு உள்பட்ட சேலம், தருமபுரி, ஒசூர், ஜோலார்பேட்டை, காட்பாடி ஆகிய 5 ரயில் நிலையங்களிலும் ரயில்வே போலீஸார் தொடர் சோதனை நடத்தி வருகின்றனர். சேலம் ரயில் நிலையத்திலும் பெண் காவலர்கள் பெண்கள் பெட்டியில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்து வருகின்றனர். அப்போது, ஆண்கள் யாரேனும் இருப்பது தெரியவந்தால், அவர்களைக் கைது செய்து வழக்குப் பதிந்து வருகின்றனர்.

கடந்த ஒரு வாரத்தில் சேலம் வழியாகச் சென்ற ரயில்களில் பெண்கள் பெட்டியில் ஏறிய 40 ஆண்களை போலீஸார் கைது செய்தனர். அவர்கள் மீது பிஎன்எஸ் சட்டம் 35 (1) பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதேபோல, சேலம் உட்கோட்டத்தில் தருமபுரியில் 26, ஒசூரில் 38, ஜோலார்பேட்டையில் 60, காட்பாடியில் 43 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக சேலம் உட்கோட்டத்தில் பெண்கள் பெட்டியில் அத்துமீறி ஏறிய 207 ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவர் மீதும் வழக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே போலீஸார் தெரிவித்தனர்.

# பாதயாத்திரை சென்ற பெண் வாகனம் மோதி உயிரிழப்பு



வெள்ளையம்மாள்.

**திருச்சி, பிப். 22:** சமயபுரத்துக்கு பாதயாத்திரையாக சனிக்கிழமை அதிகாலை சென்ற பெண் அடையாளம் தெரியாத வாகனம் மோதி உயிரிழந்தார். மற்றொரு பெண் காயமடைந்தார்.

மணப்பாறை கோவில்பட்டி அருகேயுள்ள கீழபழுவஞ்சி கிராமத்தைச் சேர்ந்த 20 பக்தர்கள் சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்கு பாதயாத்திரையாக வெள்ளிக்கிழமை புறப்பட்டனர். இவர்கள் சனிக்கிழமை அதிகாலை பஞ்சப்பூர் பேருந்து நிலையம் அருகே சென்றபோது முன்னால் சென்று கொண்டிருந்த இரு பெண்கள் மீது அந்த வழியாக வந்த அடையாளம் தெரியாத வாகனம் மோதி விட்டு நிற்காமல் சென்றுவிட்டது.

இதில் பலத்த காயமடைந்த கீழப்பழுவஞ்சி கிராம ஆரம்ப சுகாதார நிலையச் செவிலியர் வெள்ளையம்மாள் (48) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த அதே கிராமத்தைச் சேர்ந்த செல்லம்மாள் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விபத்து குறித்து எடமலைப்பட்டிபுதூர் போலீஸார் வழக்குப் பதிந்து, விபத்தை ஏற்படுத்திய வாகனம் குறித்து விசாரிக்கின்றனர்.


**NAME CHANGE**

I, **RAJESH M**, S/o. K.M.Venugopal, born on 03/04/1976 residing at S.708, Manjusham, Purva Bluemont Apartments, Singanallur, Coimbatore - 641 005, shall henceforth be known as **MANAYAMKATH RAJESH MENON.**

22/02/2025, Coimbatore. RAJESH M

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் - 09.

கிளை அலுவலகம் : M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், உத்தம் காம்ப்ளக்ஸ், 1 ஆவது தளம், 9-12, ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009

திருத்தம்

விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர்: SJ Aqua இண்டஸ்ட்ரீஸ், கடன் கணக்கு எண்கள்: 24731897 & 31604746 & 14014531 தொடர்பான மின் - ஏல விற்பனை அறிவிப்புக்காக 20-02-2025 நாளிடப்பட்ட ஒரு மின் - ஏல விற்பனை அறிவிப்பு ... "14-03-2025 ..." "25-03-2025 ..." ... 13-03-2025 ... 24-03-2025 ...

இடம்: திருப்பூர் நாள்: 20-02-2025

ஒப்/- அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் M/s HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

JM FINANCIAL

JM ஃபைனான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

மின்-ஏல விற்பனை அறிவிப்பு - தொடர்நிலை விற்பனை

நாள்: 23-02-2025, இடம்: ROTN